இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 166 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – தை 13 – ஞாயிற்றுக்கிழமை 26 ஜனவரி 2025 – மதுரை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 166 : Thiruvalluvar Year - 2056 - Thai 13 - Sunday 26 January 2025 - Madurai 8 Pages ₹ 5.00


## மொழிப்போரின் வெற்றி வெளிச்சத்திற்கு ஒளிவிளக்குகளாய் நின்று உயிர்நீத்த

# தாளமுத்து - நடராசனுக்கு திருவுருவச் சிலைகள்!

## நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து மரியாதை செய்து – முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.1.2025) தமிழ்மொழித் தியாகிகள் நினைவு நாளையொட்டி, சென்னை, மூலக்கொத்தளத்தில் அமைந்துள்ள மொழிப்போர்த் தியாகி, சமூகப் போராளி டாக்டர் எஸ்.தருமாம்பாள் அம்மையார் அவர்களது நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா.வைத்திநாதன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள், டாக்டர் எஸ்.தருமாம்பாள் அவர்களின் குடும்பத்தினர் உடனிருந்தனர்.

**சென்னை, ஜன. 26 -**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.1.2025) தமிழ்மொழி தியாகிகள் நினைவு நாளையொட்டி, சென்னை, மூலக்கொத்தளத்தில் அமைந்துள்ள மொழிப் போரின் வெற்றி வெளிச்சத்திற்கு ஒளிவிளக்குகளாய் நின்று உயிர்துறந்த தாளமுத்து - நடராசன் ஆகியோரின் நினைவிடம் 34 இலட்சம் ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்டு திறந்து வைத்தார்.**

**அதனையடுத்து “சென்னை, எழும்பூரில் உள்ள தாளமுத்து - நடராசன் மாளிகை வளாகத்தில் திருவுருவச் சிலை நிறுவப்படும்” என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.**

தமிழ் மொழி, நீராலும் நெருப்பாலும், வஞ்சகர்களின் வெறுப்பாலும் வெல்லமுடியாத வீழ்த்த முடியாத செம்மாந்த மொழியாகும்! தத்தமது உரைநடையின் வாயிலாகவும், கவிதைத் தீரமுடனும் தமிழறிஞர்கள் பலர் தங்கள் விழியெனப் போற்றி வளர்த்த வண்டமிழ் மொழியாகும்.

1938ஆம் ஆண்டு மதராஸ் மாகாணத்தின் அப்போதைய முதலமைச்சரான மூதறிஞர் இராஜாஜி அவர்கள், தமிழ்நாட்டு மாணவர்கள் இனி இந்தி கட்டாயமாக கற்க வேண்டுமென்று வெளியிட்ட அறிவிப்பினை எதிர்த்து, 27.02.1938 அன்று காஞ்சிபுரத்தில் நடைபெற்ற முதல் இந்தி எதிர்ப்பு மாநாட்டில், தாய்மொழியை காக்க இந்தி திணிப்பினை எதிர்க்க வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டு அதனடிப்படையில், தந்தை பெரியார், மறைமலை அடிகள், திரு.வி.க., நாவலர் சோமசுந்தர பாரதி, பேரறிஞர் அண்ணா போன்ற தமிழறிஞர்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் தாய்மொழி காக்க களம் கண்டனர்.

அப்போது, 14 வயதே ஆன பள்ளி மாணவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், திருவாரூர் வீதியில் தன்னுடன் பயிலும் மாணவர்களை அணி திரட்டி, “கயல், வில், புலி” சின்னம் பொறித்த தமிழ்க் கொடியினை கையிலேந்தி,

**“ஓடி வந்த இந்திப் பெண்ணே கேள்!**
**நீ தேடி வந்த கோழையுள்ள நாடிதல்லவே!”**

என்று, இந்தித் திணிப்பு எதிர்ப்பு போர்ப்பரணி பாடி, தமிழ்மொழி காக்கும் போர் வீரராய் முன்வந்தார்.



நடராசன்



தாளமுத்து

அன்னைத் தமிழ் காக்க, முதற்கட்ட இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டு, சிறை சென்ற நடராசன் 15.1.1939 அன்றும்: தாளமுத்து 11.3.1939 அன்றும் வீர மரணம் அடைந்தனர். தமிழக மக்களின் தொடர் போராட்டத்தினால், அரசு 21.02.1940ல் கட்டாய இந்தித் திணிப்பை கைவிடும் முடிவுக்கு வந்தது.

தாராளமாகவும் ஏராளமாகவும் தமிழ்ச் சொற்கள் இருந்தும், பிறமொழிச் சொல் கலந்து பேசியும், எழுதியும் தமிழுக்கு ஊறு விளைத்திட முனைந்தோரால், முடிந்தளவு முயன்றும், யாதொன்றும் புரிந்திட இயலாது, என்று முடங்கிடும் நிலையில் என்றென்றும் மாறாத இனிமைத் தமிழுக்கு ஆபத்து வரத்துணிந்த போது,

**“செந்தமிழுக்கு தீங்கொன்று வந்துற்ற பின்னும் இத்தேகம் இருந்தென்ன லாபம்?”**

என, தனக்குத் தானே கேள்வி எழுப்பிக் கொண்ட அன்னைத் தமிழின் அருந்தவப் புதல்வர்களாம் கீழப் பழுவூர் சின்னச்சாமி, விருகம்பாக்கம் அரங்கநாதன். கோடம்பாக்கம் சிவலிங்கம், மாயவரம் சாரங்கபாணி. விராலிமலை சண்முகம், கீரனூர் முத்து, பீளமேடு தண்டபாணி, சத்தியமங்கலம் முத்து, அய்யம்பாளையம் ஆசிரியர் வீரப்பன் தீக்குளித்தும், துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்ட அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர் ராஜேந்திரன் உள்ளிட்ட நூற்றுக்கணக்கானோரின் தீரத்தை நினைவு கூர்ந்திடும் நாள் தான் ஜனவரி 25ஆம் நாள் ஆகும்.

இந்தியைத் திணிக்க முயன்றோருக்கும், முயல்வோருக்கும் அச்சத்தை உருவாக்கிவிட்டுச் சென்றுள்ள தோழர்கள் நடராசன் தாளமுத்து ஆகிய இருவரின் தியாகத்தைப் போற்றும் வண்ணம் சென்னை, மூலக்கொத்தளத்தில் தந்தை பெரியார் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட நினைவிடம் தற்போது சிறப்பான முறையில் புதுப்பிக்கப்பட்டு, தமிழ்மொழித் தியாகிகள் நினைவு நாளான நேற்றையதினம் முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

முதலமைச்சர் அவர்கள் நேற்றையதினம் மொழிப் போரின் வெற்றி வெளிச்சத்திற்கு ஒளிவிளக்குகளாய் நின்று உயிர்துறந்த தாளமுத்து - நடராசன் மற்றும் மொழிப் போர்த் தியாகி, சமூகப் போராளி டாக்டர். எஸ்.தருமாம்பாள் அம்மையார் ஆகியோரது திருவுரு வப் படங்களுக்கு மலர் தூவியும், அவர்களின் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்தும் மரியாதை செலுத்தினார்.

**மொழிப்போரின் வெற்றி வெளிச்சத்திற்கு ஒளிவிளக்குகளாய் நின்று உயிர் நீத்த தாளமுத்து - நடராசன் ஆகிய இருவருக்கும் சென்னை, எழும்பூரில் உள்ள தாளமுத்து நடராசன் மாளிகை வளாகத்தில் திருவுருவச் சிலை நிறுவப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்.**

இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஐட்ரீம் ஆர்.மூர்த்தி, சி.வி.எம்.பி.எழிலரசன், எஸ்.சுதர்சனம், ஆர்.டி.சேகர், ஜே.ஜே.எபினேசர், கே.பி.சங்கர், துணை மேயர் மு.மகேஷ்குமார், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப.ரங்கநாதன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா.வைத்திநாதன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள், அரசு உயர் அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## வக்பு வாரிய மசோதா: கூட்டுக் குழுத் தலைவருக்கு தொலைபேசியில் அழுத்தம்!

# டெல்லி தேர்தலை மனதில் கொண்டு செயல்படுகின்றனர்!

## ஆ.இராசா எம்.பி. ஆணித்தரமான பேட்டி!

**புதுடெல்லி, ஜன. 26 -**

**“வக்பு வாரிய மசோதா குறித்து கூட்டுக் குழுத் தலைவருக்கு தொலைபேசியில் அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது” என்றும் “டெல்லி சட்டமன்றத் தேர்தலை மனதில் வைத்து ஒன்றிய அரசு செயல்படுகின்றது” என்றும் கூட்டுக்குழு உறுப்பினரும், நாடாளுமன்ற கழகக் கொறடாவுமான ஆ.இராசா செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.**



இதுகுறித்து இடைநீக்கம் செய்யப்பட்ட ஆ.ராசா எம்.பி. அளித்த பேட்டியில் கூறியதாவது: –

கூட்டுக்குழு கடந்த பல மாதங்களாக ஒவ்வொரு மாநிலத்துக்கும் சென்று கருத்துகளை கேட்டு வந்த நிலையில், கடந்த 21ந்தேதி லக்னோவில் சுற்றுப்பயணம் முடிந்தது. 24ந் தேதி டெல்லியில் கூட்டம் இருப்பதாக 20ந் தேதி தகவல் வந்தது.

இப்படி ஒருகாலமும் நடந்தது இல்லை. 24ந் தேதி கூட்டத்தில் வக்பு மசோதாவின் ஒவ்வொரு பிரிவு வாரியாகவும் விவாதிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

ஆனால் இன்று ( நேற்று முன் தினம்) காஷ்மீரின் இஸ்லாமிய அமைப்புகளிடம் பேசுவதாக கூறி, 27ந் தேதி கூட்டுக்குழுக் கூட்டம் நடைபெறும் என்று தெரிவித்தனர். குடியரசு தின விழாவை முன்னிட்டு, 27ந் தேதி அனைத்து உறுப்பினர்களும் சொந்த ஊரில் இருப்பார்கள். 31ந் தேதி நாடாளுமன்ற கூட்டம் நடைபெற உள்ளது.

வக்பு வாரியம் மீதான பரிந்துரைகளை தாக்கல் செய்ய ஏப்ரல் 24ந் தேதிவரை அவகாசம் உள்ள நிலையில் முன் கூட்டியே தாக்கல் செய்ய இருப்பதாக தெரிகிறது. ஜனாதிபதி உரையில் கூட அது வரலாம். டெல்லி தேர்தலில் இந்துக்களின் ஓட்டை பெறுவதற்காக இப்படி அவர்கள் செய்திருப்பதாக சந்தேகம் எழுகிறது.

நாங்கள் இதுபற்றி கேட்டோம். ஆனால் எங்களை இடைநீக்கம் செய்து விட்டனர். கூட்டுக்குழு தலைவருக்கு தொலைபேசியில் அழுத்தம் வந்துள்ளது. மிக முக்கியமான 3 பேரில் யார் அவரிடம் பேசியிருப்பார்? என தெரியவில்லை.

இவ்வாறு ஆ.ராசா எம்.பி. கூறினார்.

### வேலைக்காரர்கள் போல் நடத்துகிறார்!

திரிணாமுல் காங்கிரஸ் எம்.பி., கல்யாண் பானர்ஜி கூறுகையில், கடந்த 21ந் தேதி நடந்த கூட்டத்துக்கு பிறகு, 24 மற்றும் 25ந் தேதிகளில் அடுத்த கூட்டம் நடக்கும் என்று குழுத் தலைவர் ஜெகதாம்பிகா பால் கூறினார்.

எதிர்க்கட்சி எம்.பி.க்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். 30 மற்றும் 31ந் தேதிகளில் கூட்டம் நடத்துமாறு ஆ.ராசா கடிதம் எழுதினார். ஆனால் அதை ஜெகதாம்பிகா பால் கண்டுகொள்ளவில்லை. மேலும், 24ந் தேதி கூட்டத்துக்கான நிகழ்ச்சி நிரல், 23ந் தேதி இரவு திடீரென மாற்றப்பட்டது. நள்ளிரவுதான், உறுப் பினர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. எதிர்க்கட்சி உறுப்பினர்களை வீட்டு வேலைக்காரர்கள் போல் தலைவர் நடத்துகிறார். கூட்டம் நடக்கும்போது அவருக்கு அடிக்கடி செல்போன் அழைப்பு வருகிறது. மத்திய அரசின் உத்தரவுகளுக்கு ஏற்ப கூட்டம் நடத்துகிறார். டெல்லி சட்டசபை தேர்தலை மனதில் வைத்து விசாரணையை முடிக்க திட்ட மிடுகின்றனர் என்றார்.

### சபாநாயகருக்குக் கடிதம்!

பின்னர், 27ந் தேதி நடத்த திட்டமிடப்பட்டுள்ள கூட்டத்தை ஒத்தி வைக்க குழு தலைவருக்கு அறிவுறுத்துமாறு சபாநாயகர் ஓம்பிர்லாவுக்கு எதிர்க்கட்சி எம்.பி. க்கள் கடிதம் எழுதினர். நாடாளுமன்ற கூட்டுக் குழு, 29ந் தேதி தனது இறுதி அறிக்கையை நிறைவேற்றும் என்று குழு வட்டாரங்கள் தெரிவித்தன. டெல்லி சட்டசபை தேர்தல் பிப்ரவரி 5ந் தேதி நடப்பது குறிப்பிடத்தக்கது.

# வேங்கைவயல் சம்பவம்: வதந்திகளைப் பரப்பிட வேண்டாம்!

## தமிழ்நாடு அரசு வேண்டுகோள்!

**சென்னை, ஜன. 26 -**

**“புதுக்கோட்டை மாவட்டம் வேங்கைவயல் சம்பவத்தில் தனிப்பட்ட விரோதத்தால் 3 பேர் இக்குற்றத்தில் ஈடுபட்டுள்ளனர். எனவே இதுகுறித்து தவறான தகவல்களை பரப்பிட வேண்டாம்” என்று தமிழ்நாடு அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது.**

இதுகுறித்து தமிழ்நாடு அரசு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:–

புதுக்கோட்டை மாவட்டம், வேங்கைவயல் கிராமத்தில் பட்டியலின மக்களுக்கான மேல்நிலை குடிநீர்த் தொட்டியில் மனிதக் கழிவு கலக்கப்பட்டதாக கடந்த 2022 டிசம்பர் மாதம் புகார்கள் எழுந்தன. இக்கிராமத்தைச் சேர்ந்த குழந்தைகள் சிலர் வாந்தி மற்றும் காய்ச்சலால் பாதிக்கப்பட்டதாகவும், காவேரி நகர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும், மேலும் அதே கிராமத்தைச் சேர்ந்த இளைஞர்கள் சிலர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் மீது ஏறிப் பார்த்ததில், மேல்நிலை நீர்த்தேக்க நீரில் மலக்கழிவுகள் மிதப்பதாகவும் தெரிவித்ததைத் தொடர்ந்து, இதுகுறித்து தக்க நடவடிக்கை எடுக்குமாறு புகார் அளிக்கப்பட்டதன் அடிப்படையில், வெள்ளானூர் காவல் நிலைய Cr.No.239/2022ல் 26.12.2022 ஆம் தேதி வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இந்தக் குற்றச்சாட்டின் தீவிரத்தையும், சமூக முக்கியத்துவத்தையும் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநர் அவர்கள் இவ்வழக்கின் புலன் விசாரணையை 14.01.2023 அன்று தமிழ்நாடு குற்றப் பிரிவு குற்றப்புலனாய்வுத் துறைக்கு மாற்றினார். அதைத் தொடர்ந்து, கூடுதல் காவல் துறை இயக்குநர், குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை அவர்கள் உத்தரவின் பேரில், துணைக் காவல் கண்காணிப்பாளர் நிலையிலான அதிகாரியை புலனாய்வு அதிகாரியாக நியமித்து, புதுக்கோட்டை குற்ற எண்.01/2023ல் வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த வழக்கின் விசாரணையின்போது, புகார்தாரர் மற்றும் அவரது உறவினர்கள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட சாட்சிகள் விசாரிக்கப்பட்டதோடு, ஏராளமான ஆவணங்களும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. இதைத்தவிர, பல நபர்களின் அலைபேசி எண்கள் மற்றும் தொலைத்தொடர்பு தகவல்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. வேங்கைவயல், எறையூர் கிராம மக்களிடம் இதற்கான பல்வேறு காரணங்கள் குறித்தும் விரிவாக விசாரிக்கப்பட்டது. மேலும், அந்தக் கிராமத்தைச் சேர்ந்த சில நபர்களிடமிருந்து உயிரியல் மாதிரிகள் எடுக்கப்பட்டு, விரிவான டி.என்.ஏ பகுப்பாய்வும் செய்யப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணை மற்றும் பகுப்பாய்வுகளின் அடிப்படையில், பின்வரும் விவரங்கள் உறுதி செய்யப்பட்டன:

- சம்பவம் நடப்பதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு, 02.10.2022 அன்று வேங்கைவயலில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பராமரிப்பு குறித்து கேள்வி எழுப்பியதற்காக முத்துக்காடு ஊராட்சித் தலைவர் பத்மா என்பவரின் கணவர் முத்தையா என்பவர் கிராம சபைக் கூட்டத்தின் போது, தமிழ்நாடு காவல் துறை ஆயுதப்படைப் பிரிவில் பணியாற்றும் காவலர் முரளிராஜாவின் தந்தை ஜீவானந்தம் என்பவரை அவமானப்படுத்தும் விதமாகத் திட்டியுள்ளார். இச்சம்பவத்திற்கு பழிவாங்கும் வகையில் முரளிராஜாவால் இச்செயல் திட்டமிட்டுச் செயல்படுத்தப்பட்டது என்பது காவல் துறையின் விசாரணையின் மூலம் ஆதாரப்பூர்வமாக புலனாகியுள்ளது.
- மேலும், இச்சம்பவத்தில் முரளிராஜா, சுதர்ஷன், முத்தையா, ஆர்.முத்துகிருஷ்ணன் மற்றும் பலரின் கைப்பேசிகள் பறிமுதல் செய்யப்பட்டு, தமிழ்நாடு தடயவியல் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்ட போது, அவற்றில் இந்தச் சம்பவம் தொடர்பான பல புகைப்படங்களும், உரையாடல்களும் அழிக்கப்பட்டிருந்தது தெரியவந்தது. இந்தத் தகவல்கள் அனைத்தும் தொழில்நுட்ப உதவியோடு மீட்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டதில், இச்சம்பவத்தில் அவர்களுக்குள்ள தொடர்பு உறுதி செய்யப்பட்டது.
- இச்சம்பவம் தொடர்பான விசாரணையில் பெறப்பட்ட புகைப்படங்கள், செல்போன் உரையாடல்கள், வீடியோ ஆதாரங்கள், தடயவியல் அறிக்கை, மருத்துவ அறிக்கைகள், புலனாய்வு அதிகாரியால் செய்யப்பட்ட செயல்முறை விளக்கங்களின் முடிவுகள், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் அறிக்கை, வல்லுநர்களின் கருத்துகள் மற்றும் சாட்சிகளின் அறிக்கைகள் ஆகியவற்றைப் பகுப்பாய்வு செய்ததின் அடிப்படையில், புலன் விசாரணை முடிக்கப்பட்டு (i) முரளிராஜா, த/பெ. ஜீவாநந்தம், 32/23, வேங்கைவயல், (ii) சுதர்ஷன் 20/23, த/பெ. பாஸ்கரன், வேங்கைவயல் மற்றும் (iii) முத்துகிருஷ்ணன் 22/23, த/பெ. கருப்பையா, வேங்கைவயல் ஆகியோரின் மீது, 20.01.2025 அன்று நீதிமன்றத்தில் சிபிசிஐடி சார்பில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எனவே, இதுதொடர்பாக தவறான தகவல்களை யாரும் பரப்பிட வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.